# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**Case No. C.C - 48/2020**

**Deposition of Witness for Prosecution : P.W.3**

| | | | |
|---|---|---|---|
| Name | : ஆனந்த கிருஷ்ணன் | Caste | : |
| Father/Husband Name | : மகாலிங்கம் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(All Accused Present )**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 16.12.2024**

**முதல் விசாரணை**

நான் மதுரையில் வசித்து வருகிறேன். நான் தனியார் கம்பெனியில் கலெக்ஷன் ஏஜென்டாக பணிபுரிந்து வருகிறேன். சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை**

1. கடந்த 03.10.2019ம் தேதி 11.30 மணிக்கு நானும், எங்கள் ஊரைச்சேர்ந்த ஆதித்தன் என்பவரும், அ.சா.1 முருகன் என்பவரின் பன்றி தொழுவம் அருகே கண்மாய் பக்கமாக நடந்த சென்றபோது செக்காணுாரணி சார்பு ஆய்வாளர் நிலைய குற்ற எண். 327/2019 சம்பந்தமாக சம்பவ இடத்தை பார்வையிட்டு, பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்யப்பட்டு, நானும் ஆதித்தன் என்பவரும் கையெழுத்தோம் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது உண்மைக்கு புறம்பாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**Case No. C.C - 48 /2020**

**Deposition of Witness for Prosecution : P.W.2**

| | | | |
|---|---|---|---|
| Name | : சுரேஷ் | Caste | : |
| Father/Husband Name | : பாண்டி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(All Accused Present )**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 16.12.2024**

**முதல் விசாரணை**

நான் செக்காணுரனியில் வசித்து வருகிறேன். நான் கொக்குளம் ஊராட்சியில் துப்பரவு பணியாளராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 எனது மாமா ஆவார். சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை**

1. அ.சா.1 K.புளியங்குளத்தில் தொழுவம் அமைத்து பன்றிகளை வளர்த்து வருவதாகவும், கடந்த 02.10.2019ம் தேதி இரவு 09.00 மணிக்கு பன்றிகளை தொழுவத்தில் அடைத்துவிட்டு மீண்டும் மறுநாள் அதிகாலை சுமார் 04.00 மணியளவில் அ.சா.1 தொழுவத்தில் சென்று பார்த்தபோது தொழுவத்தில் இருந்த 10 கருப்பு பன்றிகள் மற்றும் 7 வெள்ளை பன்றிகள் காணவில்லை என்றும், அக்கபக்கத்தில் தேடிப்பார்த்து கிடைக்கவில்லை என்பதால், அ.சா.1 என்னையும், எனது உறவினர்களை அழைத்துக்கொண்டு சோழவந்தான், வாடிப்பட்டி சென்று பார்த்ததில், வாடிப்பட்டிக்கு அருகே TN 57 AL 0274 என்ற டாடா ஏசி வேனில்

எதிரிகள் இருவரும் அ.சா.1ன் பன்றிகளை திருடி, விற்பனைக்கு வைத்திருந்ததை கண்டுபிடித்து எதிரிகளை மேற்படி வண்டியையும் நிலையத்தில் ஒப்படைத்து எதிரிகளின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது உண்மைக்கு புறம்பாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**Case No. C.C - 48 /2020**

**Deposition of Witness for Prosecution : P.W.1**

| | | | |
|---|---|---|---|
| Name | : முருகன் | Caste | : |
| Father/Husband Name | : சித்தரவேல் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(All Accused Present )**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 16.12.2024**

**முதல் விசாரணை**

நான் செக்கானுரனியில் வசித்து வருகிறேன். நான் கொக்குளம் ஊராட்சியில் துப்பரவு பணியாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எனக்கு உறவினர்கள் ஆவார்கள். அரசு தரப்பு சாட்சிகளை தெரியும். கடந்த 2019ம் ஆண்டு எதிரிகளின் மீது இருந்த மனக்கசப்பின் காரணமாக நான் எதிரிகளின் மீது மிகைப்படுத்தி புகார் கொடுத்துவிட்டேன். நான் வளர்த்த பன்றிகள் காணாமல் போய் இருந்தது. பின்பு தேடிப்பார்த்த போது கிடைத்துவிட்டது. எதிரிகளின் மீது எந்த நடவடிக்கையும் தேவையில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **அந்த புகார் மனு அ.சா.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை**

1. நான் K.புளியங்குளத்தில் தொழுவம் அமைத்து பன்றிகளை வளர்த்து வருவதாகவும், கடந்த 02.10.2019ம் தேதி இரவு 09.00 மணிக்கு பன்றிகளை தொழுவத்தில் அடைத்துவிட்டு மீண்டும் மறுநாள் அதிகாலை சுமார் 04.00

மணியளவில் நான் தொழுவத்தில் சென்று பார்த்தபோது தொழுவத்தில் இருந்த 10 கருப்பு பன்றிகள் மற்றும் 7 வெள்ளை பன்றிகள் காணவில்லை என்றும், அக்கபக்கத்தில் தேடிப்பார்த்து கிடைக்கவில்லை என்பதால், எனது உறவினர்களை அழைத்துக்கொண்டு சோழவந்தான், வாடிப்பட்டி சென்று பார்த்ததில், வாடிப்பட்டிக்கு அருகே TN 57 AL 0274 என்ற டாடா ஏசி வேனில் எதிரிகள் இருவரும் எனது பன்றிகளை திருடி, விற்பனைக்கு வைத்திருந்ததை கண்டுபிடித்து எதிரிகளை மேற்படி வண்டியையும் நிலையத்தில் ஒப்படைத்து எதிரிகளின் மீது நடவடிக்கை எடுக்க புகாரிலும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது உண்மைக்கு புறம்பாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.